**இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு திட்டம் (i-வீதி - II) - 2021**

இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு திட்டம் (i-வீதி - II) இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த கணக்காண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 நொவம்பர் 22 ஆந் திகதி 3579–எஸ்ஆர்ஜ மற்றும் 3580–எஸ்ஆர்ஜ (சீஓஎல்) மற்றும் 2019 நொவம்பர் 13 ஆந் திகதி 3851–எஸ்ஆர்ஜ மற்றும் 2021 மே 28 ஆந் திகதி 4067–எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கை என்பனவற்றின் பிரிவு 4.03 இன் IV ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கிராமப்புர சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலையங்களுக்கிடையிலான வீதிகளின் அடயக்கூடிய தன்மையினை அதிகரித்தல் கருத்திட்டத்தின் குறிக்கோள்களாகும். தேசிய மற்றும் மாகாண வீதிகளின் போக்குவரத்து திறனை அதிகரிப்பது நீண்டகால தாக்கமொன்றாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 165,185 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1,084.60 மில்லியனானதுடன் அதில் ரூபா 137,070 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 900 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை பா 28,115 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 184.6 இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நிதித்திட்டம் பலதரப்பட்ட நிதி வசதிகளின் கீழ் ஐந்து பொறிகளை கொண்டிருந்ததுடன் அதில் ஐ.அ.டெலர் 500 தொகையான முதல் மூன்று பொறி உடன்படிக்கைகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் வழங்கும் முகவருடன் கையொப்பமிடப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2018 ஜுலை 20 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2027 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை<br>ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிகழ்ச்சித்திட்டமானது மீளாய்வாண்டின் போது ரூபா 153,280 பெறுமதியான ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்திருந்தும், அது தொழிற்படு மூலதனத்தில் சொத்துக்களின் தேய்வு பெறுமதியினை வேறாக சீராக்கம் செய்யப்படாமல் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 701,578 என காட்டப்பட்டிருந்தது. | 548,298 | அது திருத்தப்பட வேண்டியதுடன் வித்தியாசமானது டபல்யுஐபி இல் சீராக்கம் செய்யப்படல் வேண்டும். | ஆதனம் பொறி மற்றும் உபகரணத்தின் உண்மையான கொள்வனவு பெறுமதி முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | ஏஎம் 4 ஒப்பந்த பொதி விலை விஸ்தரிப்புடன் தொடர்புபட்ட 2021 நவம்பர் 26 இல் பிணக்கு இணக்க சபை தீர்மானத்தின் அடிப்படையில் ஒப்பந்ததாரரிற்கு சாதகமாக செய்யப்பட்டிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டமானது அதன் மீது 2021 திசெம்பர் 15 இல் திருப்தியின்மை அறிவிப்பினை வெளியிட்டிருந்தது. இருப்பினும் என்ஓடி இற்கு அப்பாலான நடவடிக்கைகள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தியிருக்காததுடன் அந்நிகழத்தக்க பொறுப்பிற்காக நிதிக்கூற்றுக்கள் ஏற்பாடு அல்லது வெளிப்படுத்தல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.08 இன் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தினால் செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | - | அடுத்த வருடத்தில் நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்ய அல்லது வெளிப்படுத்த கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்பிற்காக ஏற்பாடு செய்ய அல்லது வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.07 இற்கு முரணாக மீளாய்வாண்டின் | 3.1 மில்லியன் | அப்பதிவுகள் அடுத்த வருடத்தின் செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் திருத்தம் | சொத்துக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3.2 மில்லியன் தொகையான மூன்று மடிக்கணணிகள் மற்றும் ஒரு மேசைக்கணணி என்பன நடைமுறை அல்லாச் சொத்தாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் வடிவமைப்பு பொறிமுறைக்கான ஆலோசனை சேவை மீது ஏற்படுத்தப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 108,280 தவறுதலாக நடைமுறை அல்லாச் சொத்துக்களாக கணக்கிடப்பட்டிருந்தது. | | செய்யப்பட்டிருக்கும். | இல.07 இன் பிரகாரம் கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஈ) | 595.66 கி.மீ நீளமுடைய 149 கிராமிய வீதிகள் மற்றும் 11.61 கி.மீ நீளமுடைய 01 தேசிய வீதி என்பன 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய முகவர்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தும், அதன் மீதான கிரயம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல. 01 இன் படி ஓர் சொத்தாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | - | நிகழச்சித்திட்டமானது ஒவ்வொரு ஒப்பந்தங்களின் கீழான அனைத்து வீதிகளும் பூர்த்திசெய்யும் வரையும் ஒவ்வொரு வீதிகளின் கிரயத்தை அடையாளம் கண்டுகொள்ள பிபீஎம் இன் காலாவதி அடையாளம் கானவும் காத்திருக்க வேண்டியுள்ளது. | வீதி கிரயங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் படி மூலதனமாக்கப்படல் வேண்டும். |
| (உ) | ரூபா 25 மில்லியன் தொகையான 2021 திசெம்பர் மாதத்திற்கான மீள்நிரப்பப்படாத அல்லது திரவத்தன்மை அல்லாத செயற்திட்ட முகாமைத்துவபிரிவு செலவினங்கள் மீள்நிரப்பல் கணக்குகளில் சாட்டப்பட்டிருக்கவில்லை. எனவே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீள்நிரப்பல்கள் மற்றும் கடன் நிலுவைகள் என்பன அத்தொகையினால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | 25 மில்லியன் | மீள்நிரப்பல் மற்றும் கடன்நிலுவை என்பனவற்றின் கீழான ஏற்பாடுகள் தவறுதலாக செய்யப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய ஏற்பாடுகள் சரியாக செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் போதான வெளிநாட்டு கடன்களிலிருந்தான மொத்த செலவினம் நிகழ்ச்சித்திட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 37,316.88 ஆக இருந்தும் உரிய தொகை பொதுத்திறைசேறி மற்றும் வெளிவழங்கள் திணைக்களத்தில் முறையே ரூபா 38,231.71 மில்லியன் மற்றும் ரூபா 37,326.63 மில்லியன் எனக்காட்டப்பட்டிருந்தது. | 914.83 மில்லியன் & 9.75 மில்லியன் | பொதுத்திறைசேரியில் கணக்கில் அல்லது செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் கணக்கிடப்பட்ட மொத்த செலவினத்தை ERD இன் செலவின வழங்கள் விபரத்துடன் சரியாக கணக்கிணக்கம் செய்வது சாத்தியமற்றதாகும். | தொடர்புடய தரப்பினர்களுடன் கலந்துரையாடப்படல் வேண்டியதுடன் வேறுபாடுகள் குறைக்கப்படலும் வேண்டும். |

இருப்பினும் நிதிக்கூற்று மற்றும் வெளிவளங்கள் திணைக்களம் என்பவற்றிற்கிடையேயான வித்தியாசம் ரூபா 9.75 மில்லியனிற்கான காரணங்கள் கணக்காய்விற்காக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| இல | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த குறித்த நிபந்தனையின் உப பிரிவு 14.6 | ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடைக்கால கொடுப்பனவு பத்திரத்தின் குறைந்தபட்ச பெறுமதி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த பெறுமதியில் 1.5 சதவீதமாகும். இருப்பினும், மீளாய்வண்டின் போது 49 பொதிகளின் கீழான இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களை பரிசீலனை செய்யும் போது 266 விடயங்கள் தேவையான நிபந்தனையிற்கு கீழாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | கோவிட் 19, பாதகமான காலநிலை, மூலப்பொருட்களின் குறைபாடுகள் போன்ற காரணங்களே ஒப்பந்ததாரரிற்கு மேலதிக கிரயம் ஏற்படுவதன் பெறுபேறாகலாம். உண்மையான நிபந்தனைகளை நாங்கள் கடைப்பிடித்தால் ஒப்பந்ததாரர்களின் காசுப்பாய்ச்சல் பாதிப்படைவதுடன், அவர்கள் குறைந்த செயலாற்றலை கூட அடையமுடியாமலிருக்கும். | கிரயம், நேரம், மற்றும் ஒப்பந்ததாரரிற்கான தேவையற்ற நன்மைகளை குறைப்பதற்கு ஒப்பந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்களை கடைப்பிடித்தல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 14.7 | வேலை வழங்குனர்கள் ஒவ்வொரு ஐபிசி களிலும் உள்ள உறுதிப்படுத்தப்பட்ட தொகைகளை 56 நாட்களுக்குள் செலுத்துவார்கள். கூறப்பட்ட படி கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறாவிட்டால் ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த நிபந்தனையின் உபபிரிவு 14.8 இன் அடிப்படையில் தாமத காலப்பகுதியன் போதான செலுத்தப்படாத தொகை மீது நிதிக்கட்டணங்களை பெற்றுக்கொள்ள உரித்துடையவராவார். அதனடிப்படையில் 36 இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களில் கூறப்பட்ட நேரத்திற்கு பின்னால் 01 தொடக்கம் 68 நாட்கள் என்றவீச்சிலான தாமதம் மீளாய்வாண்டின் போது அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்ததாரர்களின் சமர்ப்பிப்புக்களிள் சில ஆவண முறன்பாடுகள் அல்லது பூர்த்தியின்மைகள் காணப்படலாம் மேலும் பொறியியலாளர்கள் அனைத்து ஐபிசி களையும் திருப்பிச்செலுத்தாது காணாமல்போன ஆவணங்களை வேண்டுகின்றனர். இச்செயன்முறையில் ஒப்பந்த நிபந்தனையில் கூறப்பட்ட நேரத்திற்கு பின்னாலான நேரத்தினை அது எடுப்பதுடன் எவ்வித ஒப்பந்ததாரரும் தற்போது வரை அவ்வாறான தாமதங்களிற்காக வட்டி கொடுப்பனவுகளை பெற்றிருக்கவில்லை. | வேலை வழங்குனரானவர் தேவையற்ற கொடுப்பனவுகளை தவிர்க்க எப்போதும் ஒப்பந்த நிபந்தனைகளுடன் இணங்கி நடக்கவேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரம் ஒப்பந்ததாரரினால் அவரது சொந்த செலவில் வழங்க வேண்டியிருந்தும், ஒப்பந்ததாரரினால் மீளப்பெற முடியுமான ஆரம்ப மற்றும் பொது உருப்படிகளின் கீழான அளவைப்பட்டியலில் ஓர் தனியான கொடுப்பனவு உருப்படி செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன்படி மொத்தமாக ரூபா 85.64 மில்லியன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் மீதான கிரயத்தினை மீளபெற்றுகொள்வதற்கு ஊவா மாகாணத்திலுள்ள ஒப்பந்ததாரரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | இவ் உருப்படிகள் பெறுகை செயன்முறையிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் பெறுகை செய்யவுள்ள ஒப்பந்தங்களிற்கான பீஓகியுவ் விலிருந்து நீக்கப்பட்டுள்ளது. | அளவைப்பட்டியலின் பரிசீலனை விலைமனு ஆவணங்களை வழங்குவதற்கு முன்னர் பெறுகை நிபுணர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 14.9 | ஓப்பந்ததாரரரானவர் கையேற்பு பத்திரம் வழங்கப்பட்டதன் பின்னர் 50 சதவீத பிடிகாசினை செலுத்தவேண்டியதுடன் மிகுதி 50 சதவீதம் குறைபாட்டு தீர்ப்பனவு காலப்பகுதி அல்லது உபஉத்தரவு பத்திரம் காலாவதியாவதன் பின்னர் விடுவிக்கப்பட முடியும். இருப்பினும் பொதிகளானது கையேர்பு பத்திரங்களை வழங்கியிராத போதிலும் 06 ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்ட ரூபா 772,656,062 தொகையான மொத்த பிடிகாசினையும் ஒப்பந்ததாரர்களிற்கு விடுவித்திருந்த நிகழ்வுகள் அவதானிக்கப்பட்டது. | அனேகமான ஒப்பந்ததாரர்கள் கோவிட் மற்றும் ஏனைய விடையங்கள் என்பன காரணமாக ஏற்பட்டிருந்த காசுப்பாய்ச்சல் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கான வங்கி உத்தரவு பத்திரங்களிற்கு ஈடாக பிடிகாசினை விடுவிக்க வேண்டியிருந்தனர். அமைச்சரவை அனுமதி பெறப்பட்டு அனைத்து பிடிகாசுகளும் விடுவிக்கப்பட்டிருந்தது. | ஓப்பந்த நிபந்தனைகள் விலகள்களிற்கான முறையான அனுமதிவரைக்கும் கண்டிப்பாக பின்பற்றப்படல் வேண்டும். |
| (உ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 15.3 | பொறியியலாளர்கள் கைவிடல்களிற்கான அறிவிப்பு வழங்கப்பட்டதன் பின்னர் சாத்தியமான அளவு விரைவில் ஒப்பந்ததாரர்களிற்கு சொந்தமான வேலைகள், பொருட்கள் மற்றும் ஏனைய கூட்டுமொத்தங்கள் என்பனவற்றின் பெறுமதியினை தீர்மானிக்க வேண்டியிருந்தும் ஊவா மாகாணத்தில் கைவிடப்பட்ட ஒப்பந்தங்களின் அறிவிப்பு வழங்கப்பட்டதன் | கைவிடப்பட்ட தருனத்தில் பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளின் பெறுமதியை தயாரிக்க இணைந்த அளவீடுகள் பெறப்படல் வேண்டும். இருப்பினும் ஒப்பந்ததாரர் அவ்வாறான வேலைகளை இணைந்து செயற்பட வந்திருக்காததுடன் அதனால் பொறியியலாளர் கைவிடப்பட்ட தருனத்திலான பெறுமதியை தயாரிக்க அனைத்து வேலைகளையும் | கைவிடலின் போதான பெறுமதி மீள்ஏலமிடல் செயன்முறை ஆரம்பிக்க முன்னர் பூர்த்திசெய்யப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பின்னர் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 மாதங்களிற்கு மேல் கடந்ததன் பின்னர் கூட வேலை வழங்குனரால் செய்யப்பட்டிருக்கவில்லை. | செய்ய வேண்டியுள்ளது. இருப்பினும் தற்போது கைவிடலின் போதான பெறுமதி பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் விபரங்கள் சமர்ப்பிக்கமுடியும். | |
| (ஊ) | 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மானத்துறை அபிவிருத்தி சட்டம். | வெளிநாட்டு ஒப்பந்ததாரர்கள் இலங்கையிலுள்ள ஏதாவது அடையாளப்படுத்தப்பட்ட நிர்மான வேலையில் ஈடுபடுவதற்கு முன்பு நிர்மான துறை அபிவிருத்தி சபையில் (சீஐபீஏ) ஓர் ஒப்பந்ததாரராக தற்காலிக பதிவினை பெற்றிருத்தல் வேண்டும். இருப்பினும், நிகழ்ச்சித்திட்டமானது 09 ஒப்பந்ததாரர்களுடன் தொடர்புபட்ட சில ஒப்பந்தங்களின் கையளிப்பிற்கு முன் சீஐபீஏ வின் பதில் தேவைப்பாட்டினை கவனத்தில் கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | சீஐடிஏ பதிவு செய்தல் தேவைப்பாடுகள் ஏலங்களை நிராகரிப்பதற்கான ஓர் அளவுகோலாக கருத்தில்கொள்ள முடியாதிருந்தது. | ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்வதற்கு முன்னர் ஒப்பந்ததாரரின் தரப்படுத்தல் செய்யப்படல் வேண்டும். |
| (எ) | 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டம். | ரூபா 5 மில்லியனிற்கு அதிகமான பெறுமதி கொண்ட பொது ஒப்பந்தங்களின் விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை சேகரிக்கும் முன்னர் பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதன் பின்னர் ஒப்பந்த பதிவினை கூட பெற்றிருத்தல் வேண்டும். செயற்திட்டமானது உரிய விலைமனுதாரர்களின் தொழிநுட்ப விலைமனுவினை பரிசீலிக்கும் போது அத் தேவைப்பாட்டினை கருத்தில் கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்ததாரர்கள் ஏடிபி உருப்புரிமை நாட்டில் பதிவு செய்யப்பட்ட நிர்மான கம்பனியாக தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் ஏடிபி யினால் கருப்புபட்டியலிடப்படவில்லை. | விலைமனுதாரர்கள் மற்றும் கையளிக்கப்பட்ட ஒப்பந்தம் என்பன பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும். |
| (ஏ) | 2006 பெறுகை வழிகாட்டியின் பிரிவு 5.3.7 (ஆ) | ஏலங்கள் ஓர் கூட்டுமுயற்சியாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தும் கூட்டுமுயற்சியின் அனைத்து தரப்பினர்களும் ஒப்பந்தத்தின் கீழான செயலாற்றல் பொறுப்புக்களிற்கு கூட்டாக அல்லது தனியாக கடமைப்பட்டிருந்ததுடன் | அனைத்து பங்குதாரர்களின் முறையாக கூறப்பட்ட தேவைப்பாட்டிற்கான ஏலதாரர் அறிவுறுத்தல் கூட்டுமுயற்சி உடன்படிக்கையின் போது அல்லது கூட்டுமுயற்சி ஒன்றினை நிறுவ கூட்டாக அல்லது தனியாக | பெறுகை வழிகாட்டியில் கூறப்பட்ட நிபந்தனைகளுடன் இணங்க தேவைப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எழுத்துமூலமான உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்க வேண்டும் தொழிநுட்ப ஏலங்களுடன் ஒப்பந்ததாரர்களினால் அவ்வாறான எழுத்துமூலமான உறுதிப்படுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. | கடமைப்பட்டிருப்பார். | |

**3. பௌதீக முன்னேற்றம்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| இல | கூறுகள் | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | தேசிய மற்றும் கிராமிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் பூர்த்தியாக்கள் மற்றும் பாரமழித்தல். | வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் மேல் மாகானங்களிலுள்ள 36 தேசிய வீதிகளின் 417.75 கி.மீ கள் மற்றும் 1349 கிராமிய வீதிகளின் 3338.87 கி.மீ களின் வீதி புனர்நிர்மான வேலைகள் 2021 ஏப்ரலில் வசதியளிப்பு நிர்வாக கையேட்டின் பிரகாரம் செயற்திட்டத்தினால் புனரமைக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தும், 01 தேசிய வீதியின் 11.61 கி.மீகள் மற்றும் 149 கிராமிய வீதிகளின் 595.66 கி.மீகள் மாத்திரமே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டு உரிய முகவர்களிடம் கையனிக்கப்பட்டிருந்தது. | வசதியளிப்பு நிர்வாக கையேடு கடன் உடன்படிக்கையின் ஆரம்பகட்டத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது டன் எதிர்பார்க்கப்பட்ட திகதிகள் மதிப்பீடுகள் மாத்திரமே. | நிகழ்ச்சித்திட்டத்தின் உரிய இலக்குகளை அடைய தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தேசிய மற்றும் கிராமிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் பூர்த்தியாக்கல். | ஊவா மாகாணத்திலுள்ள வீதி புனரமைப்பு ஒப்பந்தங்களின் ஆரம்பிப்பு திகதி 2018 ஜுலை 20 ஆகவிருந்ததுடன் உண்மையன பூர்த்தியாக்கள் 2020 ஜுலை 20 ஆகவிருந்தது. அனைத்து ஒப்பந்தங்களும் 15 பொதிகளின் கீழ் செயன்முறைப்படுத்தப்பட்டது. ஒப்பந்தங்களின் உண்மையான பூர்த்தியக்கல் திகதியிலிருந்து 529 நாட்கள் கடந்திருந்தும் வீதிகள் புனரமைப்பு வேலைளின் மொத்த நீளம் 1012.89 கி.மீ களில் 650.86 கி.மீ நீளம் மாத்திரமே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. மேலும் 249 கிராமிய வீதிகளில் 110 வீதிகள் மாத்திரமே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. | இச் செயலாற்றல் செங்குத்தான நிலப்பரப்பிலுள்ள நிர்மானங்களின் கடினத்தன்மை பாதகமான காலநிலை மற்றும் கோவிட் 19 பரவல் நிலைமை போன்றனவாலாகும். | நிகழ்ச்சித்திட்டத்தின் உரிய இலக்குகளை அடைய தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | தேசிய மற்றும் கிராமிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் பூர்த்தியாக்கல். | கிழக்கு மாகாணத்திலுள்ள வீதி புனரமைப்பு ஒப்பந்தங்களின் ஆரம்பிப்பு திகதி 2019 செப்தம்பர் 24 ஆகவிருந்ததுடன் உண்மையன பூர்த்தியாக்கள் 2021 செப்தம்பர் 24 ஆகவிருந்தது. உண்மையான பூர்த்தியக்கல் திகதியிலிருந்து 98 நாட்கள் கடந்திருந்தும் ஒப்பந்ததாரர்கள் புனரமைப்பு வேலைளிள் 795 கி.மீ களில் 518 கி.மீ நீளத்தை மாத்திரமே பூர்த்திசெய்திருந்தனர். இருப்பினும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 370 வீதிகளில் 34 வீதிகள் மாத்திரமே வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது. | நிர்மானங்கள் 2019 முடிவில் கையளிக்கப்பட்டிருந்தது டன் கோவிட் பரவல் நிர்மான வேலைகளை பாதகமாக தாக்கியிருந்தது. | நிகழ்ச்சித்திட்டத்தின் உரிய இலக்குகளை அடைய அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பொறியியலாளர் மதிப்பீடு, விலைமனு ஆவணங்கள் மற்றும் அளவைகள் பட்டியல் என்பன அரச பெறுகை வழிகாட்டியின் உப பிரிவு 2.4 மற்றும் 2.6 இன் பிரகாரம் பெறுகைக்குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்தும், ரூபா 48.2 மில்லியன் நட்டம் பொறியியலாளர் மதிப்பீடுகள் ஏல ஆவணங்கள் மற்றும் அளவைப் பட்டியல்கள் போன்றவற்றில் உருப்படிகளில் விகித முரண்பாடுகள் மற்றும் பிழையான விளக்கம் என்பன காரணமாக பீஏ4 மற்றும் பீஏ5 ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்டு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிகழ்ச்சித்திட்டத்தினால் செய்யப்பட்டிருந்தது. | பீஎ4 மற்றும் பீஎ5 ஒப்பந்தங்களின் மதிப்பிடப்பட்ட விலை மனுவின் விலை நியாயமானதாக கண்டறியப்பட்டது. எஸ்சீஎபிசி மற்றும் டிசசி எடீபீ இன் மதிப்பீட்டு வழகாட்டிகளின் ஏற்பாடுகளிற்கு விலைமனுக்களை மதிப்பிட்டது. | நட்டத்தினை மீளப்பெற நிகழ்ச்சித்திட்டதினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அனைத்து ஆய்வுகூடம், தளபாடம் மற்றும் சில அளவை உபகரணங்கள் ஒப்பந்த நிபந்தனைகளின் உப பிரிவு 108.4 மற்றும் 120.7 இன் பிரகாரம் நிகழ்ச்சித்திட்ட முடிவில் ஒப்பந்ததாரரிற்கு திருப்பி அனுப்பபட வேண்டியிருந்தும், 2021 திசெம்பர் 31 இல் உளளவாறு மொத்தமாக ரூபா 932.98 மில்லியன் மற்றும் ரூபா 16.23 மில்லியன் ஒட்டுமொத்தமாக முறையே ஆய்வுகூடம் தளபாடம் மற்றும் நிலஅளவை உபகரணங்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது. இதனால் அசாதாரண ஒப்பந்த நிபந்தனைகள் ஒப்பந்ததாரர்களிற்கு தகாத நன்மைகளை ஏற்படுத்தலாம் என்பதை அது சுட்டிக்காட்டலாம். | எதிர்காலத்தில் ஆர்டிஏவிற்கு ஏதாவது தளபாடம் மற்றும் ஆய்வுகூட மற்றும் அளவை உபகரணங்கள் தேவைப்பட்டால், இந்நிபந்தனைகள் அவ்வாறான நிபந்தனைகளுடன் வழங்க சீரமைக்கப்படும். மேலும் இவ் உருப்படிகள் 2-3 வருடங்களிற்கு மேல் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ஒப்பந்த முடிவில் அனேகமாக பாவனையற்ற அல்லது காலம் கடந்த நிலையில் காணப்பட்டது. | ஒரு பொது நடைமுறையாக, உரிய சொத்துக்கள் தொழில் வழங்குனரால் தக்கவைத்துக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான ஒப்பந்ததாரரின் கிரயம் ஏனைய நன்கொடை வழங்கும் செயற்திட்டத்தினால் கையளிக்கப்பட்ட ஏனைய ஒப்பந்த பொதிகளின் கிரயத்துடன் ஒப்பிடும் போது குறைக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வீதி புனரமைப்பு செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கிழக்கு மாகாணத்திலுள்ள புதிதாக சேர்க்கப்பட்ட 06 வீதிகள் வசதி நிர்வாக கையேட்டிலோ தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிற்கு கையளிக்கப்பட்ட தொடர்புடைய ஒப்பந்த பொதிகளின் கீழோ உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட அந் நிர்மானங்களிற்காக எடீபீ மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சம்மதம் செயற்திட்டத்தினால் பெறப்பட்டிருக்கவில்லை. | தேவையான ஆவணங்கள் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வேலைப்பரப்பு கடன் வழங்கும் முகவர் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றின் சம்மதத்தின் பின்னரே மாற்றம் செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | 03 கைவிடப்பட்ட ஒப்பந்தப்பொதிகளுடன் தொடர்புபட்ட ரூபா 690.74 மில்லியன் தொகையான செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை காசாக மாற்ற மீளாய்வாண்டின் இறுதியில் கூட நிகழ்ச்சித்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரர்கள் முறிகளினை காசாக மாற்றுவதை தவிர்க்க நீதிமன்ற கட்டளையை எடுத்துள்ளதுடன் வழக்குகள் நடைமுறையிலுள்ளது. | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரங்கள் ஒப்பந்த நிபந்தனைகளில் கூறப்பட்ட படி காசாக மாற்றப்படல் வேண்டும். |
| (உ) | கடன் வழங்கும் முகவர் வேலை ஆரம்பிப்பு முற்பணத்தினை மீளப்பெற்று கைவிடப்பட்ட ஒப்பந்தங்களுடன் தொடர்புபட்ட கடன் வழங்கும் முகவரிற்கு மீளச்செலுத்த அறிவுறுத்தப்பட்டிருந்தும் செயற்திட்டமானது ஊவா மாகாணத்திலுள்ள 03 கைவிடப்பட்ட ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்ட ரூபா 560.14 மில்லியன் தொகையான நிலுவை வேலை ஆரம்பிப்பு முற்பணங்களை மீளப்பெற தவறியிருந்தனர். அதன் படி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளப்பெறப்படாத மொத்த வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் ரூபா 13,922.63 மில்லியனாகும். | ஒப்பந்ததாரர்கள் முறிகளினை காசாக மாற்றுவதை தவிர்க்க நீதிமன்ற கட்டளையை எடுத்துள்ளதுடன் வழக்குகள் நடைமுறையிலுள்ளது. எனவே அத்தொகைகள் மற்றும் கைவிடல்கள் மீதான கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வது நீதிமன்ற கட்டளைகள் பூர்த்தியானதன் பின்னரே இறுதியாக்க முடியும். | முற்பணங்களை உடனடியாக மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | பொறியியலாளர்கள் மதிப்பீட்டிற்கு எதிரான ஒப்பந்த தொகைகளில் தேறிய பெறுமதி அதிகரிப்பு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்கனவே கையளிக்கப்பட்டிருந்த ஏழு மீள் ஏலமிடப்பட்ட ஒப்பந்த பொதிகளின் 10.33 சதவீதம் தொடக்கம் 33.21 சதவீதம் வரையான வீச்சிற்குள் இருந்தது. | பொறியியலாளர்களின் மதிப்பீடு எச்எஸ்ஆர் இனை பயன்படுத்தி தயார்க்கப்படுவதுடன் கிராமிய வீதிகளின் கிரயத்தின் மதிப்பீட்டிற்கு பயன்படுத்துவது சாத்தியமற்றதாகும். எனவே விதிமுறைகள் அதன்படி மாற்றம் செய்யப்படல் வேண்டும். | பொறியியலாளர்களின் மதிப்பீடுகள் பெறுகை வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் யதார்த்தமானதாக இருக்க வேண்டும். |
| (எ) | நிகழ்ச்சித்திட்டமானது ஒன்றுக்குமேற்பட்ட ஒப்பந்தங்களை அனுமதிப்பதனை குறைந்த நீடிப்பு பதிலளிப்பு ஏலதாரரை தவிர்க்க ஏல ஆவணங்களின் பிரிவு 03 இலுள்ள விசேட உபபிரிவு 1.6 இன் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தமை அரச பெறுகை வழிகாட்டி நியம ஏல ஆவணங்களிற்கு முரணாக இருந்தது. எனவே குறைந்த நீடிப்பு பதிலளிப்பு ஏலதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட | செயற்திட்டமானது அதிகளவான ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்த செயலாற்றல் அற்ற ஒப்பந்ததாரர்கள் பற்றி முன்அனுபவத்தினை கொண்டுள்ளனர். மேலும் இவைகள் ஏற்கனவே கைவிடப்பட்ட பொதிகளாக | பெறுகை வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் நிகழ்ச்சித்திட்டத்திற்கு சிக்கனமற்ற கிரயங்களை குறைக்க கண்டிப்பாக பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்த பொதியை வழங்க முடியாமலிருக்கக்கூடும். கையளிக்கப்பட்ட பொதிகளிலிருந்து மாத்திரம் நிகழ்ச்சித்திட்டத்திற்கான அதிகரித்த கிரயம் ரூபா 66.7 மில்லியன் ஆகவிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இருந்ததுடன் பூர்த்தியாக்கலில் தாமதம் பல்வேறு பொதுமக்கள் முறைப்பாடுகளிற்கு வழிவகுக்கும் எனவே ஓர் ஒப்பந்ததாரரிற்கு ஓர் ஒப்பந்தபொதியை மாத்திரமே கையளிப்பதற்கு முனைந்திருந்தது. | |
| (ஏ) | இரண்டு மீள ஏலமிடப்பட்ட ஒப்பந்த பொதியும் (ஆர்டி-1 மற்றும் ஆர்டி-6) நிகழ்ச்சித்திட்டமானது ஒன்றுக்குமேற்பட்ட ஒப்பந்தங்களை அனுமதிப்பதனை குறைந்த நீடிப்பு பதிலளிப்பு ஏலதாரரை தவிர்ப்பதன் நிபந்தனையின் காரணமாக மீண்டும் ஏலமிடப்படல் வேண்டும். மேலும், அவ் இரண்டு ஒப்பந்தப்பொதிகளும் 2022 மார்ச் 31 இல் உள்ளவாறு மீள் ஏலமிடப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே தேவையற்ற ஏல நிபந்தனைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் அனைத்து செயலாற்றலையும் பாதகமான முறையில் நேரடியாக பாதித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | பீஎம்யு ஆனது மீண்டும் ஏலங்களை கோருவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது. ஏல ஆவணங்களிற்கான டிஈசீ பரிந்துரை பெறப்பட்டுள்ளது. ஏலங்கள் எம்பிசீ இன் அனுமதியுடன் அழைக்கப்படும் என்பதுடன் ஏடீபீ இன் ஒத்துழைப்புகூட பெறப்படல் வேண்டும். | ஒப்பந்தங்களின் நிபந்தனைகள் நிகழ்ச்சித்திட்டத்திற்கான தேவையற்ற தாமதங்கள் மற்றும் கிரய அதிகரிப்பு என்பனவற்றை தவிர்க்க மிகஆழமாக மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |
| (ஐ) | தேவையற்ற ஏல நிபந்தனைகளை அமுல்படுத்துவதாலான ஊவா மாகாணத்திலுள்ள கைவிடப்பட்ட ஒப்பந்தங்கள் மீதான மீளஏலமிடல் பெறுகை நடவடிக்கைகளின் தாமதமானது வீதி புணரமைப்பு வேலைகளின் மிருதுவான செயற்பாட்டினை நேரடியாக தாக்கிருந்தது. மேலும், வீதி புனரமைப்பு வேலை ஒப்பந்தங்களின் குறித்த நிபந்தனை 103.2 (2) இன் பிரகாரம் ஏற்கனவே உள்ள வீதிகளின் வழமையான பராமரிப்பிற்காக ஓர் கொடுப்பனவு உருப்படி காணப்படுகின்றது. இருப்பினும், மீளாய்வாண்டின் போதான அவசர பராமரிப்பு வேலைகளை ஈடுசெய்ய ரூபா 66.26 மில்லியன் தொகையுடன் 04 மேலதிக ஒப்பந்த பொதிகள் கையளிக்கப்பட்டிருந்ததுடன் இது நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஓர் தெளிவான மேலதிக மற்றும் சிக்கனமற்ற செலவினமாகும். | அவ்வாறான வீதிகளின் பராமரிப்பிற்காக ஏற்பட்ட மேலதிக கிரயம் அவ்வீதிகளின் கைவிடப்பட்ட ஒப்பந்த பொதிகளிலிருந்து மீளப்பெறப்பட்டிருக்கும். | கைவிடலின் போதான பெறுமதி மீளஏலமிடல் செயன்முறையை எளிதாக்க வினைத்திறனாக அறிந்துகொள்ளப்பட வேண்டியதுடன் மீளஏலமிடலானது தேவையற்ற தாமதங்கள் மற்றும் கிரயங்களினை குறைக்க ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளின் கீழ்செய்யப்படல் வேண்டும். |
| (ஒ) | பெறுகை கையேட்டின் பிரிவு 7.9.2 இன் பிரகாரம் குறைந்தளவு மதிப்பிடப்பட்ட உரிய ஏலமானது கணிசமான அளவு எல்லையுடன் பொறியியலாளர்கள் மதிப்பீட்டை மிஞ்சியிருந்தால், பெறுகை நிறுவனமானது புதிய ஏலத்தினை கருத்தில் கொள்ள அல்லது ஏலதாரருடன் பேரம் பேச | பொறியியலாளர்களின் மதிப்பீடு எச்எஸ்ஆர் இனை பயன்படுத்தி தயார்க்கப்படுவதுடன் கிராமிய வீதிகளின் கிரயத்தின் மதிப்பீட்டிற்கு பயன்படுத்துவது சாத்தியமற்றதாகும். எனவே | பொறியியலாளர்களின் மதிப்பீடுகள் பெறுகை வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் யதார்த்தமானதாக |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டும். இருப்பினும், பேரம்பேசப்பட்ட ஏல விலைகள் கூட பொறியியலாளர்கள் மதிப்பீட்டை விட கணிசமான அளவு உயர்வாக இருந்ததுடன் 32.8 சதவீதம் தொடக்கம் 39.7 சதவீதத்திற்கு இடையே வித்தியாசப்பட்டது. எனவே பொறியியலாளர்கள் மதிப்பீடானது சரியான முறையில் தயார்க்கப்படவில்லை என்பதுடன் விலை பேரம்பேசலானது வடமாகாண ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்டு சரியான முறையில் நடாத்தப்பட்டிராமையும் அவதானிக்கப்பட்டது. | விதிமுறைகள் அதன்படி மாற்றம் செய்யப்படல் வேண்டும். | இருக்க வேண்டும். |
| (ஓ) | ஓர் குறித்த ஒப்பந்ததாரர் வடமாகாணத்திலுள்ள 08 ஒப்பந்த பொதிகளில் கணிசமானளவு பொறுப்புதாரராக காணப்பட்டதுடன் டிஈசின் மதிப்பீட்டின் பிரகாரம், 08 சம்பந்தப்பட்ட ஒப்பந்த பொதிகளிற்கான தேவையான சராசரி வருடாந்த நிர்மான வருமானமானது (ஏஏசீடிஓ) ரூபா 23,200 மில்லியனாகவிருந்தது. ஆனால் குறித்த கம்பனியின் காணப்படும் ஏஏசீடிஓ ஆனது ரூபா 22,700 மில்லியனானதுடன் கம்பனியானது அனைத்து 08 பொதிகளிற்குமாக தகுதி பெற ரூபா 500 மில்லியன் குறைபாட்டுடனிருந்தமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும், டிஈசி மற்றும் எஸ்சிஏபிசி என்பன மேற்கூறிய நெருக்கடியான அடிப்படையினை கருத்தில்கொள்ளாது செயற்திட்ட பணிப்பாளரின் கருத்துறைகளை கருத்தில் கொண்டு அவ் ஒப்பந்தாரரிற்கு அனைத்து 08 பொதிகளையும் கையளிக்க தீர்மானித்திருந்தன. மேலும், உண்மையான ஒப்பந்தகாலம் 08 ஒப்பந்த பொதிகளிலுள்ள அனைத்து 141 வீதிகளில் 96 சதவீதத்தினால் முடிவடைந்திருந்தும், 06 வீதிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 84 வீதிகளின் பௌதீக செயலாற்றல் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 75 சதவீதத்திற்கு கீழாக காணப்பட்டடிருந்தது. | குறித்த ஒப்பந்ததாரரிற்கு அனைத்து 08 ஒப்பந்த பொதிகளினையும் கையளிப்பதிலுள்ள ஆபத்தானது மிகவும் குறைவு என பிஎம்யூ மற்றும் டிஈசி இனால் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மறு ஏலத்திற்கு செல்வதை விட இது நன்மை பயக்கும். | ஏலநிபந்தனைகள் சில ஒப்பந்ததாரர்களிற்கு தேவையற்ற நன்மைகளை தவிர்த்து மாற்றமின்றி கடினமாக பின்பற்றப்படல் வேண்டும். |

**3.3 வெளிக்கள விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்.**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிலக்கீழ்தரையானது வடிவமைப்புக்கள், வடிகான்கள், சவுள்டர்ஸ் (shoulders), நிலக்கீழ் பாலம் போன்றனவை பூர்த்திசெய்யப்படாமல் ரூபா 178,643,296 ஏற்பட்ட | சில சந்தர்ப்பங்களில், ஒப்பந்ததாரர்கள் அடுத்தபடியான நடவடிக்கைகளினை ஆரம்பிப்பதற்கு தேவையான வேலை ஆரம்பிப்பு வளங்களில் | அனைத்து நிர்மான செயன்முறையும் எவ்வித தாமதமுமின்றி மிருதுவக அமுல்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிரயத்துடனான ஒப்பந்த பொதி சீஎல்-03 இலுள்ள 32.85 கி.மீ வீதி பிரிவுகள் விஸ்தரிப்பில் புனையப்பட்டடிருந்தது. இது நிழக்கீழ் தரையின் உறுதித்தன்மையினை மோசமாக பாதிக்கலாம் என்பதுடன் மீதமாக உள்ள நிர்மானத்திற்காக இயந்திரங்களை பயன்படுத்தி செய்யப்பட்ட நிலப்பதப்படுத்தல் கூட நிழக்கீழ் தரையினை சேதமாக்கலாம் . | சிரமங்களை எதிர்கொள்ளாமல் போவதுடன் ஏற்கனவே பூர்த்திசெய்யப்பட்ட நடவடிக்கை பாதிப்புக்குள்ளாகலாம். | |
| (ஆ) | சீஎல்03 ஒப்பந்தப்பொதியின் கீழான 3.88 கி.மீகள் நீளமான நிலக்கீழ் தரைப்பிரிவின் வடிகான்கள், 26.97 கி.மீகள் நீளமான சவுள்டர்ஸ் (shoulders) மற்றும் 13 நிழக்கீழ் பாலங்கள் 2021 திசெம்பர் 16 இலான கணக்காய்வு திகதியில் கூட பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | அதிகளவான வீதி மேம்படுத்தல்கள் தேவையற்ற வடிவமைப்பு வேலைகள் காரணமாக நீண்டகாலம் தாமதமடைந்து அல்லது எடுத்துயிருந்ததுடன் முன்னுரிமையானது வண்டிப்பாதை நிர்மான வேலைகளிற்காக வழங்கப்படும். | அனைத்து நிர்மான செயன்முறையும் எவ்வித தாமதமுமின்றி மிருதுவக அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | வடிகான் நிர்மானங்கள் நியம விபரக்குறிப்பின் உபபிரிவு 701.1(ii) இன் பிரகாரம் வீதி பயன்பாட்டாளர்களிற்கான சிரமத்தினை குறைப்பதற்கான பொறியியலாளர்களின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் செய்யப்படவேண்டியிருந்தும் சில கலப்பு வடிகான்களின் இரண்டு மூடிகளிற்கிடையேயான இடைவெளி நியமஇடைவெளியை விட அதிகமாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அது உரிய இடத்தின் உரிமையாளர்கள் மற்றும் வீதி பயன்பாட்டாளர்கள் என்பவர்களிற்கு அதிக சிரமத்தினை ஏற்படுத்தலாம். மேலும் கூட்டுமொத்தம் ரூபா 661,040 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழுவூட்டல் மற்றும் கட்டமைப்பு உள்ளடங்களாக 150 மி.மீ கனமான ப்ரிகாஸ்ட் காங்கிரீட் மூடிகளிற்காக சீஎல்03 ஒப்பந்தபொதிகளில் செலுத்தப்பட்டிருந்தது. | சில கலப்பு வடிகான்களின் மூடிகளிற்கிடையே இடைவெளி பொறியியலாளர்களின் வடிவமைப்பிலுள்ள நியமஇடைவெளியை விட அதிகமாக இருந்தமையை உத்தியோகத்தர்கள் கூட அவதானித்திருந்தனர். இதனை சரிசெய்ய ஒப்பந்ததாரர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | இது நிர்மானங்களிற்கான நியமவிபரனக்குறிப்புடன் கடுமையாக இணங்கிஒழுக வேண்டும். |
| (ஈ) | ஒப்பந்ததாரரானவர் நேரான வழியை வழங்கி அனைத்து குறிகாட்டிகள், விளக்குகள், தடைகள், வீதி அமைப்பதற்கான போக்குவரத்து கட்டுப்பாடு போன்றவற்றினை பராமரிப்பதனூடாக போக்குவரத்து மற்றும் மூன்றாம் தரப்பினர்களின் பாதுகாப்பிற்காக தேவையான அளவீடுகளை எடுக்க வேண்டியதுடன் தடைகளானது வழுவான சிவப்பு விளக்குகளுடன் அல்லது எச்சரிக்கை | கொடுப்பனவு கழிப்பனவுகளானது சில மாதங்களின் போதான பற்றாக்குறையான பாதுகாப்பு அளவீடுகள் காரணமாக செய்யப்பட்டிருந்தது. சில இடங்களின் பாதுகாப்பு வேலிகள் கிராமிய வீதிகளின் குறுகிய பிரிவுகள் காரணமாக பராமரிக்கமுடியாமலிருக்கும். இருப்பினும், ஆழமான அகல்வாராய்ச்சி தடுப்பு | வேலை வழங்குளர் மற்றும் ஆலோசகர்கள் ஏற்கனவே உள்ள வீதிகளின் புனரமைப்பின் போது ஒப்பந்ததாரர்களிளால் பாதுகாப்பு அளவீடுகள் அமுல்படுத்தப்படுவதனை மீளாய்வுசெய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விளக்குகள் இரவு வேலைகளில் தடைகள் மீது ஏற்படுத்தப்பட வேண்டியிருந்தும் ஒப்பந்ததாரர்கள் சிலசந்தர்ப்பங்களில் இத்தேவைப்பாட்டினை பின்பற்ற தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அக்குறைபாடுகளிற்காக கழிக்கப்படாமல் 2021 திசெம்பர் 17 இல் உள்ளவாறு கூட்டுமொத்தம் ரூபா 6,279,196 ஒப்பந்ததாரரிற்கு செலுத்தப்பட்டிருந்தமை ஒப்பந்த செயற்திட்ட பாதுகாப்பு முகாமைத்து திட்டத்தின் உபபிரிவு 4.4 மற்றும் ஒப்பந்த குறித்த நிபந்தனையின் விபரக்குறிப்பு 103 என்பனவற்றிற்கு முரனாக காணப்பட்டது. | நடவடிக்கையின் போது ஒழியூட்டுமுறைமை பராமரிக்கப்பட்டிருந்தது. | |
| (உ) | சீஎல்01 ஒப்பந்த பொதியின் கீழாக பொதுப்பயன்பாடுகளை (தொலைபேசி கம்பங்கள்) அகற்றாமல் நிழக்கீழ் பாதை செய்யப்பட்டிருந்தமை சில சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அது கணக்காய்விற்கு கேள்விக்குறியாக உள்ளது. | தொலைபேசி கம்பங்களை அகற்றலானது அகற்றுவதற்கான ஒப்பந்ததாரரினால் கிரயம் செலுத்தப்பட்டதன் பின்னர் அவர்களின் பட்டியலின் படி எஸ்எல்டி யினால் செய்யப்படுகின்றது, இது வேலை வழங்குளரால் ஐபிசி இனூடாக மீளப்பெறப்படுகின்றது. | இது அகற்றல் வேலைகளில் தாமதத்தினை தவிர்க்க ஒப்பந்ததாரரினால் சரியான கொடுப்பனவுகள் செய்யப்படுகின்றமையை புலனாய்வு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | ஒப்பந்த உடன்படிக்கையின் செயற்திட்டபாதுகாப்பு முகாமைத்துவதிட்டத்தின் உபபிரிவு 4.2 இன் பிரகாரம் சீஎல் 01, சீஎல் 02 மற்றும் சீஎல் 03 பொதிகளில் காணப்பட்ட 81 பொதுமக்கள் முறைப்பாடுகள் 06 மாதங்கள் தொடக்கம் 01 வருடங்களிற்கு மேல் என்ற வீச்சிலான காலப்பகுதியின் போது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிர்மான நடவடிக்கைகளில் உள்ளடக்கிய முறைப்பாடுகள் வீதி அமுல்படுத்தல் செயலாற்றலின் படி தீர்க்கப்படுகின்றது. இருப்பினும் அனைத்து முறைப்பாடுகளும் வீதிகளை கையளிப்பதற்கு முன்னர் தீர்க்கப்பட்டிருக்கும். | முறைப்பாடுகளை தீர்த்து வைத்தலானது துரிதப்படுத்தப்படல் வேண்டும். |

### 3.4 புறநடையான கொடுப்பனவுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| ரூபா 126.78 மில்லியன் தொகையான ஒப்படைப்பு கட்டணங்கள், மீளாய்வாண்டின் போது மீளப்பெறப்படாத பெறுவனவுகள் மீது கடன் வழங்கும் முகவரிற்கு சிக்கனமற்ற முறையில் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரான திரட்டிய ஒப்படைப்பு கட்டணங்கள் ரூபா 576.30 மில்லியனாகும். | ஒப்படைப்பு கட்டணங்களின் கொடுப்பனவை அது ஒரு சிக்கனமற்ற கொடுப்பனவாக இருப்பினும் தவிர்க்க முடியாததாகும். ஆனால் மீளப்பெறல் இலக்குகளை அடைவதனூடாக அதனை குறைக்க முடியும். | தேவையற்ற கிரயங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.5 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்ர்பட்ட விடயங்கள்**

| வெற்றிடங்கள் | பதவிகளின் எண்ணிக்கை | | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | கணக்காய்வாளர் பரிந்துரைகள |
|---|---|---|---|---|---|
| | அனுமதிக்கப் பட்டவை | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உண்மை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | | |
| சிரேஸ்ட பொறியியலாளர் | 6 | 1 | 5 | செயலாளரின் அனுமதி சில வெற்றிடங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்ததுடன் சில முடிவுபெறாத நிலையில் உள்ளது. மேலும் நேர்முகப்பரீட்சைசபைகள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் நேர்முகப்பரீட்சைகள் சில அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்காக தாமதமின்றி நடாத்தப்படும். | சிறந்த வெற்றிடங்கள் செயலாற்றலினை உச்சமட்டத்தில் பேண நிகழ்ச்சித்திட்டத்தினால் பராமரிக்கப்படல் வேண்டும். |
| ஒருங்கினைப்பு பொறியியலாளர் | 14 | 4 | 10 | | |
| செயற்திட்ட பொறியியலாளர் | 28 | 15 | 13 | | |

**3.6 செயற்திட்ட கண்காணிப்பு பிரிவுடன் தொடர்புபட்ட விடயங்கள்**

| பிரதான வெற்றிட நிலைகள் | பீஎம்யூ வில் சேவைக்காலம் | வேறு நிறுவனங்களில் வேலை செய்தாரா | ஓப்பந்த அடிப்படையிலா/பதில் அடிப்படையிலா வேலைசெய்தார் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| செயற்திட்ட பணிப்பாளர் (ஊவா). | 13 மாதங்கள் | ஆம் (வீதி அபிவிருத்தி அதிகார சபை) | பதில் அடிப்படை | விளம்பரங்கள் இரண்டு தடவைகள் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் பதில் செயற்திட்ட பணிப்பாளர் தவிர்ந்த விண்ணப்பங்கள் இரண்டு இடங்களிளும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | செயற்திட்ட பணிப்பாளர் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் எப்பொழுதும் முழுநேர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டும். |

## 3.7 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்டத்தின் வசதி நிர்வாக கையேடு மற்றும் 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்தவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரிவு 9 என்பவற்றின் பிரகாரம், ஒவ்வொரு மாகாணத்திலும் செயற்திட்ட வழிகாட்டும் குழு மற்றும் மாகான ஒருங்கினைப்பு குழு கூட்டம் செயற்திட்ட அமுல்படுத்தலினை மேற்பார்வை, கண்கானிப்பு மற்றும் ஒருங்கினைப்பு செய்ய ஆகக்குறைந்தது காலாண்டிற்கு ஒருமுறை நடாத்தப்படல் வேண்டும். இருப்பினும், 2021 ஆம் ஆண்டிற்காக ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஓர்மெய்நிகர் கூட்டம் நெடுஞ்சாலை அமைச்சின் செயலாளரின் தலைமையின் கீழ் 2021 திசெம்பர் 16 இல் நடாத்தப்பட்டிருந்தது. | அனைத்து வழிகாட்டல் குழுக்களும் நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் அமுல்படுத்தப்பல் வேண்டும். |